# ஸ்ரீகோகுலாஷ்டமி - ஸ்ரீஜெயந்தி -2013

## *வழிபாடு நாள் விளக்கம்*

| | |
|---|---|
| புதன் கிழமை 12 ஆவணி, 28.8.2013 | **ஜென்மாஷ்டமி, கோகுலாஷ்டமி, கிருஷ்ணாஷ்டமி** |
| புதன் கிழமை 12 ஆவணி, 28.8.2013 | **ஸ்ரீஜயந்தி** |
| புதன் கிழமை 12 ஆவணி, 28.8.2013 | **முனித்ரய ஸ்ரீஜயந்தி(வைகானாஸம்)** |
| வியாழன் கிழமை 13 ஆவணி, 29.8.2013 | **ஸ்ரீஜயந்தி(பாஞ்சாரத்திரம்)** |

இவ்வாண்டு ஆவணி 12ம் நாள்(28.8.2013) புதன் கிழமை அன்று கிருஷ்ண ஜயந்தி பூர்ணமாக வருகிறது. ஃ யாதெனில் <u>அஷ்டமி திதி, ரோகினி நட்சத்திரம், ஹர்ஷண யோகம், நள்ளிரவு, சந்திர உதயம், ரிஷப லக்னம்</u> என அனைத்து அம்ஸங்களுடன் சேர்ந்து வருவது மிகவும் சரியான ஸ்ரீஜயந்தி நாளாகும். **இது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே அரிதாக ஏற்படும்**. இதுவே கிருஷ்ணர் பிறப்பின் காலசூழலுடன் ஒத்துப்போகும் நிலையாகும். இந்நாள் பூர்ண கிருஷ்ண ஸ்ரீஜயந்தி , கோகுலாஷ்டமி, வைகானஸ ஜயந்தி என அழைக்கப்படும்

✱ பாஞ்சாரத்திர ஸ்ரீஜயந்தி: கிருத்திகை வேதை இருப்பதால் பாஞ்சாரத்திர முறையில் மறுநாள் 29.8.2013 வியாழன் அன்று ஸ்ரீஜயந்தி.

**குறிப்பு:** *இந்த விசேஷ சூழல் தென் கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா துவங்கி, மேற்கு ஆசியாவில் கிருஷ்ணரின் காலடி மண்பட்ட காந்தாரம்(கந்தகார்-ஆப்கானிஸ்தான்) வரை மட்டுமே நிகழும் என்பது குறிப்பிடத்தக்கது. (சந்திர தரிசனம் மட்டும் சில இடங்களில் மாறுபாடும்)*

## விரத நிர்ணய சூத்திரம்

### கோகுலாஷ்டமி, கிருஷ்ணாஷ்டமி சூத்திரம்

கோகுலாஷ்டமி (கிருஷ்ணாஷ்டமி) விரதம் வேறு ஸ்ரீ ஜெயந்தி வேறு
கோகுலாஷ்டமி (கிருஷ்ணாஷ்டமி) விரதம் **சந்திர மாதமான சிராவண பகுள அஷ்டமி** திதியே பிரதானம்
அஷ்டமி நள்ளிரவில் வியாபித்திருப்பது மிக முக்கியம்
இந்த கோகுலாஷ்டமி (கிருஷ்ணாஷ்டமி) விரதம் ஆடி (கடகம்) அல்லது ஆவணி(சிம்மம்) மாதத்தில் வரும்
ஆவணியில் வரும் பொழுது ஸ்ரீ ஜெயந்தியுடன் சேர்ந்து அல்லது முன் னாள் அல்லது பின் னாளில் வரும்

### ஸ்ரீ ஜெயந்தி சூத்திரம்

அஷ்டமி திதி, ரோகினி நட்சத்திரம், ஹர்ஷண யோகம், ரிஷப லக்னம் சேர்க்கை மிக முக்கியம்
சந்திர மாதமான சிராவண மாதத்தில் அல்லது பாத்ரபத மாதத்தில் வரும்
சிராவண மாதத்திற்கு அதிக முக்கியத்துவம் ஆயினும் சிராவண மாதத்தில் அஷ்டமி ரோகினி சேர்க்கை இல்லை எனில் பாத்ரபத மாத்தில் செய்யலாம்
சூரியன் நிற்கும் சிம்ம மாஸம் (ஆவணி) தவிர கடகம்(ஆடி), கன் னி(புரட்டாசி) மாதங்களில் செய்யக்கூடாது.
சிராவண மாதத்தில் அல்லது பாத்ரபத மாதத்தில் அஷ்டமி, ரோகினி சேர்க்கை இல்லை எனில் அந்த வருடம் ஸ்ரீ ஜெயந்தி இல்லை !

### வைகானஸ ஸ்ரீ ஜெயந்தி சூத்திரம்

ஸ்ரீ ஜெயந்தி சூத்திரம் இதற்கு பொருந்தும் ஆயினும்
ரோகினிக்கு கார்திகை தொடர்பு, அஷ்டமிக்கு சப்தமியின் தொடர்பு இருக்கக்கூடாது.

### பாஞ்சாரத்திர ஸ்ரீ ஜெயந்தி சூத்திரம்

ரோகினிக்கு கார்திகை தொடர்பு, அஷ்டமிக்கு சப்தமியின் தொடர்பு இல்லையெனில் மிகவும் விசேஷம்
அஷ்டமி முடிவு காலமும், ரோகினி முடிவு காலமும் உதயத்தில் இரண்டு நாழிகை இருப்பின் அன் று தான் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி (ஸ்ரீ வைஷ்ணவ ஜெயந்தி) ஆகும்

**ஸ்ரீ தணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா**
பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்- ஜோதிடர் - பஞ்சாங்க கணிதக்ஞர். 98403 69677
| Email: prohithar@gmail.com | Web: http://www.prohithar.com | www.thanigaipanchangam.com |
ஸ்ரீ கிருஷ்ணார்பணம்

www.prohithar.com